**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 142/2015**
**நாள்.27.03.2026**
**பி.வா.சா.1- விஜயலட்சுமி**
**க/பெ - ராஜேந்திரன்**
**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. தாவா சொத்து ஆதியில் நத்தம் புறம்போக்காக இருந்தது என்றால் நத்தம் புறம்போக்காக இருந்தது. ஆனால் ஆதியில் இருந்து நத்தம் புறம்போக்காக இருந்ததா என்று எனக்கு தெரியாது.

2. வாதிகள் 20 செண்ட் நிலத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் தென்வடலாக அய்யலூர் செல்லக்கூடிய தார்ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த ரோட்டிற்கு மேற்புறமாக எங்கள் ஊர் அமைந்துள்ளது. அந்த ரோட்டிற்கு கிழபுறமாக உள்ள 20 செண்ட் தான் தாவா சொத்து என்றால் சரிதான்.

3. மேற்படி ரோட்டிற்கு கிழக்கே உள்ள உள்ள 20 செண்ட் நிலத்திற்கு கிழக்கே 1ம் வாதிக்கு கிரைய அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். அதற்குரிய சர்வே எண்.264/1 என்றால் சரிதான்.

4. 1ம் வாதி கிரையம் பெற்ற சர்வே எண்.264/1க்கு கட்டுப்பட்ட சொத்தில் மனைகளாக பிரித்து 7 பேருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தை ஒட்டி கிழக்கே உள்ள மனையை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

5. எனது மனைக்கு கிழக்கே உள்ள மனையை துரைப்பாண்டி என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதற்கு கிழக்கே அமராவதி என்பவர் ஒரு மனையை கிரையம் பெற்றுள்ளார்.

6. மேற்படி மூன்று மனைகளை ஒட்டி வடக்கே 10 அடி பொதுப்பாதை உள்ளது என்றால் இல்லை.

7. துரைப்பாண்டி, அமராவதி ஆகியோர் அவர்களது மனைக்கு வடக்கே உள்ள 10 அடி பொதுப்பாதையை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.

8. நான் கிரையம் பெற்ற மனைக்கு எதிரே உள்ள மனைகளில் முத்துக்காளை, முருகஜோதி, முருகன், பூங்கொடி ஆகியோருக்கு மனைகள் விற்கப்பட்டுள்ளன என்றால்

சரிதான். துரைப்பாண்டி, அமராவதி மற்றும் நானும், கிரையம் பெற்ற மனைகளுக்கும் முத்துக்காளை, முருகஜோதி, முருகன், பூங்கொடி ஆகியோர் கிரையம் பெற்ற மனைகளுக்கு இடையே உள்ள 10 அடி பொதுப்பாதையை மேற்கண்ட நபர்கள் பயன்படுத்திவருகிறார்கள் என்றால் சரிதான்.

9. மேற்படி பாதை சர்வே எண்.264/1ல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதையை பயன்படுத்திக்கொள்வதற்கு கிரைய பத்திரத்தில் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு நான் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தில் காட்டவில்லை.

10. நான் கிரையம் பெற்ற மனையில் 2280 அடி கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற மனை வடக்கு பார்த்த மனை தான் என்றாலும், அது மேற்கு பார்த்த மனை என்று வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

11. எனது மனையை ஒட்டி மேற்கே 1ம் வாதிக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றால் சரியல்ல. அந்த இடத்தில் 1ம் வாதியின் சகோதரி தகர செட் அமைத்துள்ளார்என்றால் சரியல்ல, அது பட்டா இடம் அல்ல. அது புறம்போக்கு இடம் ஆகும். மேற்படி தகர செட் புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பதால் அதை அகற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் அது சம்பந்தமாக நான் புகார் கொடுத்து இடத்தை வந்து அளந்து பார்த்தார்கள். அவ்வாறு அளந்து பார்த்த பின்பும் மேற்படி தகர செட்டை அகற்றிவிட்டார்களா என்றால் இல்லை, இடத்தை அளக்க விடவில்லை.

12. இடத்தை அளந்து பார்த்து மேற்படி தகர செட் பட்டா நிலத்தில் உள்ளது என்பதால் தான் அதை அகற்றவில்லை என்றாலும், மேற்படி இடத்தை அளக்க வாதிகள் விடவில்லை என்றும், அது அகற்றப்படாமல் உள்ளது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. அரசு அதிகாரிகளை வாதிகள் அளக்க விடவில்லை என்பதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதிகள் இடத்தை அளக்கவிடவில்லை என்றும், முதலில் அளந்து பார்த்தார்கள் என்றும், முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14. பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் பொய்யான மனுக்கள் என்பதால் நான் கொடுத்த மனுக்கள் மீது அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, வாதிகள் தரப்பில் இடத்தை அளக்கவிடவில்லை.

15. நான் கிரையம் பெற்ற மனையை ஒட்டி கிரையம் பெற்றுள்ள நபர்களை விசாரித்தால் அவர்கள் எந்த பாதையை பயன்படுத்திவருகிறார்கள் என்ற விவரம் தெரியவரும் என்றால் விசாரித்தால் தெரியவரும்.

16. ரோட்டிற்கும் பட்டாநிலத்திற்கு இடையில் உள்ள 20 செண்ட் இடத்தை ஆதியில் அப்துல் கரீம், அப்துல் சத்தார் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் பெற்ற சொத்தையும் அப்துல் கரீம் மற்றும் அப்துல் சத்தார் அனுபவித்து வந்து 1ம் வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி நிலத்தை நீண்டகாலமாக அனுபவித்து வந்ததால் ஜாரிஉத்தரவு மூலம் அரசு கொடுத்துவிட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

17. மேற்படி 20 செண்ட் நிலத்தில் அப்துல் சத்தார் தனக்குரிய பாதி பாகத்தை 28.09.1983ம் தேதி தனது சகோதரரான அப்துல் கரீமிற்கு கிரையம் செய்து கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 20 செண்ட் நிலத்தில் இருந்து மேல் புறமுள்ள 10 செண்ட் நிலத்தை அப்துல் கரீமிடமிருந்து 1ம் வாதி 16.10.1991ம் தேதி கிரையம் பெற்றுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 20 செண்ட் நிலத்தில் இருந்து கீழ் புறமுள்ள 10 செண்ட் நிலத்தை அப்துல் கரீமிடமிருந்து 1ம் வாதியின் மாமனார் பின்னியப்பதேவர் 16.10.1991ம் தேதி கிரையம் பெற்றுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

18. பின்னியப்பதேவர் தான் கிரையம் பெற்ற 10 செண்ட் இடத்தை 2,3 வாதிகளுக்கு 18.05.2007ம் தேதி தானசெட்டில்மெண்ட் மூலம் கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகாவது மேற்படி விவரங்களை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

19. தாவா சொத்து வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ-4 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்துகொண்டு பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

20. 1ம் வாதியிடம் இருந்து வடக்கு பார்த்த மனையை கிரையம் பெற்றுவிட்டு மேற்கு பார்த்த மனையாக மாற்ற பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

21. நான் கிரையம் பெற்ற மனைக்கு 1ம் வாதி ஏற்கனவே பாதை அமைத்து கொடுத்துள்ளார் என்றாலும், நான் புதியதாக பாதை உருவாக்க எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**